[1982 பிப்ரவரி 15

தமிழ்நாட்டிலுள்ள வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு மையங்கள்

*வினா எண் 214—திரு. செ. செம்மலை: மாண்புமிகு நீர்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை வேளாண் பொறியியல் பணி கூட்டுறவு மையங்கள் (Agro Engineering Service Co-operative Centres) உள்ளன?

(ஆ) அவற்றை அதிகரிக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) தமிழ்நாட்டில் வட்டார அளவில் மொத்தம் 217 வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) தற்போது இல்லை.

திரு. செ. செம்மலை: பெரும்பாலான பணி கூட்டுறவு மையங்கள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதாகத் தெரிகிறது. அந்த மையங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்கத்தக்க வகையில் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? இது போன்ற மையங்கள் தற்போது ஆற்றிவருகிற பணிகளோடு வியாபார ரீதியான பணிகளையும் இந்த மையங்களிடம் ஒப்படைக்க அரசிடம் திட்டம் ஏதாவது உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பொதுவாக இப்போது இயங்கி வருகிற 217 மையங்களில் பெரும்பாலான மையங்கள் நட்டத்தில்தான் இயங்கி வந்திருக்கின்றன. ஆனால் சமீப காலத்தில், ஒரு ஆறு மாத காலமாக 120க்கு மேற்பட்ட மையங்கள் இலாபகரமாக நடப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் சில மையங்களை லாபகரமாக நடத்த முடியும் என்றும் அரசு நம்புகிறது. சில மையங்கள் என்ன முயற்சி எடுத்தாலும் இலாபகரமாக நடத்தமுடியாது என்ற சூழ்நிலையில் அவைகளையெல்லாம் துணை மையங்களாக நடத்த அனுமதித்து வேறு புதிய இடங்களில் இலாபகரமாக நடத்த சாத்தியக்கூறு இருக்குமானால் அதை தயார்படுத்தலாமா என்று அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. செ. செம்மலை: தற்போது அது போன்ற மையங்கள் டிராக்டர்கள் போன்ற வேளாண்மைக் கருவிகளை வாடகைக்கு விடுவதோடு அந்தப் பணிகளை முடித்துவிடுகிறது. எனவே அது போன்ற மையங்களை இலாபகரமாக இயக்குவதற்கு பெஸ்டிஸைட்ஸ் போன்ற பொருள்களை விற்பனை செய்கிறவகையிலும் வியாபார ரீதியில் அந்த மையங்களை நடத்த அரசு முன்வருமா

1982 பிப்ரவரி 15]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பொதுவாக இந்த மையங்கள் வவசாயத் தொடர்பான விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள், டீஸல், ஆயில், விசைதெளிப்பான், விவசாய உபகரணங்கள், விவசாயக் கருவிகளுக்குத தேவையான உதிரி பாகங்கள், இந்தத் தொழில்களை நடத்தலாம், வியாபாரத்தை நடத்தலாம் என்றுதான் மையங்களுக்கு நாம் அறிவுறுத்தியிருக்கிறோம். சில மையங்கள் நிதி ஆதாரம் இல்லாத சூழ்நிலையில் பெரும்பாலான வியாபாரங்களை மேற்கொள்ள முடியவில்லை. அவைகளுக்கு ஏதாவது உதவி செய்து சிறந்தமுறையில் அவைகளை நடத்துவதற்கு அந்த மையங்களை தயார்படுத்தலாமா என்று அரசு இப்போது யோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம்: இந்த 217 மையங்கள் தவிர இன்னும் பல மையங்கள் துவங்குவதற்காக விவசாயிகளிடம் இருந்து பங்குத தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது. மூன்று நான்கு ஆண்டுகளுககு முன்னால். ஆனால் அந்த மையங்கள் எலலாம் துவங்கப்படவில்லை. ஆனால் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை மட்டும் டெப்பாஸிட் செய்யப்பட்டுள்ளது. எனவே ஒன்று அந்த மையங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் அல்லது வசூலிக்கப்பட்ட அந்தப் பங்குத் தொகை திருப்பித் தரப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளிலே அப்படி பங்குத் தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் தந்தால், அதுகுறித்துப் பதில் சொல்ல முடியும்.

வேடசந்தூர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கனிமங்கள் குறித்த ஆய்வுகள்.

* வினா எண்—215. திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வேடசந்தூர் பகுதியில் பீங்கான் பொருள்களுக்கு தேவைப்படும் மூலப்பொருள் எடுககும் சாத்தியக் கூறுகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டம் ரெங்கமலை வரையறுககப்பட்ட வனங்களில் வெங்கக்கல் (quartz) மற்றும் கனிமம் (feldspar) முதலிய கனிமங்கள் இருப்பது அறியப்பட்டது. இக்கனிமங்களைப் பற்றிய தரம் மற்றும் இருப்பு அளவினை அறிவதற்கு களப்பணி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1980 ஆம ஆண்டில் மேற்கூறிய கனிமங்களுக்கு தமிழ்நாடு கனிம நிறுவனத்தினர் சுரங்க குத்தகைக்கு மனுச் செய்துள்ளனர். அது அரசின் ஆய்வில் இருக்கிறது.